பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 04 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் வளர்ச்சிப் பாதையை வடிவமைப்பதில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் வகையில், புதுதில்லியில் இன்று மகளிர் ஆற்றலை போற்றும் தேசிய அளவிலான மாநாடு நடைபெற உள்ளது.

2. உலகளவில் நிலவும் பல்வேறு சவால்களுக்கு இடையே இந்தியா சமநிலையான வெளியுறவுக்கொள்கையை கடைபிடித்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழகம் மற்றும் மேற்குவங்கத்தில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

4. ஈரானுடன் இஸ்லாமாபாதில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை காலதாமதப்படுத்தும் உத்தியாக அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **18** ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிப் பாதையை வடிவமைப்பதில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் வகையில், புதுதில்லியில் இன்று மகளிர் ஆற்றலை போற்றும் மாநாடு நடைபெற உள்ளது.

தேசிய அளவிலான இந்த மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றுகிறார்.

பஞ்சாயத்து அமைப்புகள் முதல் நாடாளுமன்றம் வரை அனைத்து நிலைகளிலும், நிர்வாகம் மற்றும் தலைமைப் பொறுப்புகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான அரசின் அர்ப்பணிப்பை செயல்படுத்தும் வகையில் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் அரசு, கல்வி, அறிவியல், விளையாட்டு, தொழில்முனைவோர், ஊடகம் மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

உலகளவில் நிலவும் பல்வேறு சவால்களுக்கு இடையே இந்தியா சமநிலையான வெளியுறவுக்கொள்கையை கடைபிடித்து வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய அவர், மேற்கு ஆசியாவில் நிலவும் போர் பதற்றங்களுக்கு இடையே அரசு சரியான அணுகுமுறையை கடைபிடித்து வருவதாக கூறினார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளுடனும் இந்தியா சுமூகமான உறவைப் பேணி வருவதைச் சுட்டிக்காட்டிய அவர், இதன் காரணமாகவே சர்வதேச கடல் வணிகத்தில் முக்கியப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியில் இந்தியக் கப்பல்கள் எவ்விதத் தடையுமின்றி பயணிப்பதாக தெரிவித்தார்.

பல நாடுகள் பொருளாதார நிச்சயமற்ற தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியா தனது பொருளாதாரத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், மேற்குவங்கம் மாநிலங்களில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

பிரச்சாரம் நிறைவடைய 9 நாட்களே உள்ள நிலையில் பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் நேற்று மதுரையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

திமுக ஆட்சியில் பல்வேறு துறைகளில் ஊழல் நடைபெற்றுள்ளதாகவும், எனவே இந்த ஆட்சியை தமிழக மக்கள் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பண்பாட்டுக்கும், கலாச்சாரத்திற்கும் எதிராக செயல்படும் கட்சிகளுக்கு வரும் தேர்தலில் மக்கள் பாடம் கற்பிக்க வேண்டும் என்று கூறினார்.

ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்பதற்கு அடையாளமாக மத்திய அரசு காசி தமிழ்ச் சங்கமத்தை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி தமிழ் மற்றும் தமிழ்க் காலாச்சாரத்தை மேம்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் அஇஅதிமுக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்போது வேலையில்லாத இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் திரு. நிதின் நபின் கூறினார்.

இந்நிலையில், திண்டுக்கல்லில் பொதுக்கூட்டத்தில் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எம்.ஏ.

பேபி, சரக்கு மற்றும் சேவை வரியால் பெரும்பாலான வருவாய் மத்திய அரசுக்கு கிடைப்பதாகவும் ஆனால், அந்த வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதில் மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதாகவும் குறை கூறினார்.

தமிழகத்துக்கு கல்வி நிதியாக 3 ஆயிரத்து 548 கோடி ரூபாயும், ஜல்ஜீவன் திட்ட நிதியாக 3 ஆயிரத்து 112 கோடி ரூபாயும், இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியாக 37 ஆயிரம் கோடி ரூபாயும் மத்திய அரசு விடுவிக்காமல் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய மாநில உறவுகளை மேம்படுத்துவதற்காக திமுக அரசு ஒரு குழுவை அமைத்திருப்பதாகவும் அந்த குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை நடைமுறைக்கு வர வேண்டுமெனில் மீண்டும் திமுக ஆட்சி மாநிலத்தில் அமையவேண்டும் என்றும் திரு. பேபி கேட்டுக்கொண்டார்.

மேற்குவங்கத்தில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை ஆதரித்து பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா, பல்வேறு இடங்களில் பிரச்சாரம் செய்து வருகிறார்.

திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் அக்கட்சியின் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

**13 04 2026 7 15 M.A. Baby/Nabin-2**

**இனி தேர்தல் களம்...**

**(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)**

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது ஈரோடு மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

**(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 203 செகண்ட்ஸ்)**

**13 04 2026 7 15 M.A. Baby/Nabin-2**

ஈரானுடன் இஸ்லாமாபாதில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை காலதாமதப்படுத்தும் உத்தியாக அமெரிக்கா பயன்படுத்தியதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்து புதுதில்லியில் உள்ள ஈரானிய உயர்மட்டத் தலைவரின் பிரதிநிதியான திரு அப்துல் மஜீத் ஹக்கீம் இந்திய அரசிடம் தங்களது நாட்டின் நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

அமெரிக்காவின் நோக்கம் குறித்து ஆரம்பத்திலிருந்தே சந்தேகம் இருந்தபோதிலும், ஈரான் அமைதியை விரும்பும் நாடு என்பதை உலகுக்குக் காட்டவே இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

ஈரான் போரைத் தூண்டும் நாடு அல்ல என்றும் ஈரான் பிரதிநிதி கூறியுள்ளார்.

**13 04 2026 7 15 M.A. Baby/Nabin-2**

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 18 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 240 ரன் எடுத்தது.

241 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய மும்பை அணி, 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 222 ரன் மட்டுமே எடுத்தது.

இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**